International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 • 4 October • December 2026

Published on 14, Oct - Dec 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

செவ்வியல் இலக்கியங்களில் மூவேந்தர்களின் குலமரபும் அரச அடையாளங்களும்

பூ. ஆனந்தி
முனைவர் பட்ட ஆய்வாளர்

முனைவர் ஆ. திருமேனி
உதவிப்பேராசிரியர், நெறியாளர், தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர் – 608 002

ஆய்வு நோக்கமும் முறையும்

இவ்வாய்வின் முதன்மை நோக்கம், செவ்வியல் இலக்கியங்களில் இடம்பெறும் சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தர்களின் குலமரபு, அரச அடையாளங்கள், அடையாள மாலைகள், கொடிச் சின்னங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய வெற்றிச் செய்திகள் ஆகியவற்றைத் தொகுத்து ஆராய்வதாகும். குறிப்பாக, தொல்காப்பியம், புறநானூறு, அகநானூறு, பதிற்றுப் பத்து, பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம் போன்ற இலக்கியங்களில் காணப்படும் சான்றுகள் முதன்மைத் தரவுகளாகக் கொள்ளப்படுகின்றன. இலக்கியங்களில் காணப்படும் செய்திகள் அவை தோன்றிய காலம், இலக்கியச் சூழல் மற்றும் பிற்கால உரை/வரலாற்று விளக்கங்களின் அடிப்படையில் தனித்தனியாக அணுகப் படுகின்றன. இவ்வாய்வு விளக்கவியல் மற்றும் பகுப்பாய்வு முறைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

ஆய்வுச் சுருக்கம்

பண்டைய தமிழகத்தில் முடிசூடி அரசாண்ட பெருநிலவேந்தர்கள் சேர, சோழ, பாண்டியர்கள் ஆவார்கள். அவர்களின் வீரத்தை வெளிப்படுத்தும் வகையிலும் குலபெருமையையும், கொடிச்சிறப்பினையும் செவ்வியல் இலக்கியங்கள் வழி ஆராயப்படுகிறது. வடவேங்கடம் தென்குமரி என தொல்காப்பியம் தமிழகத்தின் எல்லையை குறிப்பிடுகிறது. சேரர்கள் சங்ககாலத்தில் கேரளர்கள் என்றும் அது காலப்போக்கில் சேரர்கள் என்றும் சேரமான் என்றும் மாறியது. சோழர்கள் அரிசி விளையும் நாட்டை ஆண்டதால் சோறு உடையவர்கள் என்று அழைத்தனர் அது காலப்போக்கில் சோழர்கள் என்று மாறியது. மேலும் பாண்டியர்களைப் பழமையான குடியினைச் சேர்ந்தவர்கள் என்பதால் பாண்டியர் என்னும் அழைத்தனர். என்ற கருத்துக்கள் உள்ளது. மேலும் மூவேந்தர்களின் குலங்களைப் பற்றி கூறும் தமிழ் இலக்கியங்கள் சேரர்களை அக்னி குலத்தவர்கள் என்றும் சோழர்களைச் சூரிய குலத்தவர்கள் என்றும் பாண்டியர்களை சந்திரகுலத்தவர்கள் என்றும் இலக்கியங்கள் கூறுகிறது. மூவேந்தர்களின் வெற்றி மாலைகளை பற்றி தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் நமக்கு தெளிவுபடுத்துகிறது. சேரர்களுக்கு பனம் பூமாலையும் சோழர்களுக்கு ஆத்திபூ மாலையும் பாண்டியர்களுக்கு வேப்பபூ மாலையும் வெற்றியின் அடையாள மாலைகளாக இருந்தது என்பதை விளக்குகிறது. மூவேந்தர்களும் தனது அரசியலின் அடையாளமாக கொடிகளை வைத்திருந்தனர். சேரருக்கு வில் கொடியும் , சோழருக்கு புலி கொடியும், பாண்டியர்களுக்கு மீன் கொடியும் வெற்றி கொடிகளாக இருந்தது என்பதை செவ்வியல் இலக்கியம் விளக்குகிறது. மேலும் அவை வேந்தர்களின் வெற்றியின்

அடையாளமாகவும் இருந்தது என்பதையும் அவர்கள் வெற்றி கண்ட நாட்டில் இக் கொடிகள் பறந்தது என்பதையும் விளக்கு கிறது. மேலும் இவர்கள் வட இந்தியா வரை சென்று போர் புரிந்து வெற்றி கண்டு தனது வெற்றியின் அடையாளமாக இமயமலையில் மூவேந்தர்களின் கொடிகளை பறக்க விட்டார்கள் இந்நிகழ்வு தமிழர்களின் எல்லை கடந்த வீரத்தை உலகிற்கு பறைச்சாற்று கின்றது.

முதன்மைச் சொற்கள்: மூவேந்தர், சேரர், சோழர், பாண்டியர், குலமரபு, கொடிச் சின்னம்

முன்னுரை

தமிழகத்தின் நெடிய வரலாற்றையும் பண்பாட்டையும் உலகிற்குப் பறைச்சாற்றும் ஒப்பற்ற சான்றுகளாக திகழ்வது நமது செவ்வியல் இலக்கியங்களே. அவ்விலக்கியங் களை துணையாக கொண்டு தமிழகத்தை ஆட்சி செய்த முதல் வேந்தர்கள் என்ற பெருமைக்குரியவர்கள் சேர, சோழ, பாண்டியர்கள் என்னும் மூவேந்தர்களே. இம் மூவேந்தர்களும் தமக்கெனத் தனித்துவமான குலப் பெருமையையும், தங்களின் வீரம், கொடை அடையாளங்களை உலகிற்கு உணர்த்தும் வெற்றி கொடிகளையும் கொண்டு அரசாண்டனர். இவர்களின் குலப் பின்னணியும் மற்றும் சின்னங்களாகிய கொடிகளும் வெறும் ஆட்சி அடையாளங்கள் மட்டுமல்ல அவை தமிழர்களின் வீரத்தின் அடையாளமாக உள்ளது என்பதை தொல் காப்பியம் துவங்கி முத்தொள்ளாயிரம் வரை மூவேந்தர்களின் குல வழிமுறைகளையும் அவர்களின் கொடிச் சிறப்பினை பற்றியும் ஆராய்வதே இவ்வாய்வு கட்டுரையின் நோக்கமாகும்.

மூவேந்தர்களின் குடிப்பெயர்கள்

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே
வாளோடு முன் தோன்றி மூத்தகுடி

என்று போற்றப்படும் தமிழர்கள் உலகில் பல பகுதிகளில் வரலாறு தோன்றுவதற்கு முன்பு வாழ்ந்த ஆப்பிரிக்க, ஐரோப்பிய மக்களை போல் தங்கள் வாழ்க்கையைத் தொடங்கினர். நிலத்துக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பை நிலவியல் விளக்கும் ஆற்றல் பெற்றுள்ளது அதுபோல காலத்துக் கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பை வரலாறு விளக்குகிறது சேரர், சோழர், பாண்டியர் என்பது பன்மை பெயர். சேரன், சோழன், பாண்டியன் என்பது ஒரு குடியில் பிறந்தாரைச் சுட்டும் குடிப்பெயராகும்.

மூவேந்தர்களின் சொல்லும் பொருள்

சேரர்கள் சங்ககாலத்தில் 'சேரமான்' என குறிப்பிடப்பட்டனர். சேர+மகன்=சேரமன் இது நாளடைவில் 'சேரமான்' என்று மாறி இருக்கலாம்என்றும் இவர்கள் கேரளத்தை சேர்ந்தவர்கள் என்பதால் 'கேரளர்கள்' நாளடைவில் 'சேரலர்கள்' 'சேரர்கள்' என்றும் மாறியிருக்கலாம் என்று கருத்துக்கள் உள்ளது. சோழரின் பெயர் தோற்றத்தினை அறிதியிட்டு கூறமுடியாது. இருப்பினும் இப்பகுதியில் நெல் அதிகம் விளைவதால் 'சோறுடை நாடு' என்று அழைத்தார்கள் அது காலப்போக்கில் சோறுடை நாடு என்பது 'சோழ நாடு' என்றும் சோழ நாட்டவர்கள் சோழர்கள் என்றும் மாறியிருக்கலாம் என்ற கருத்துக்கள் உள்ளது. மூவேந்தர்களின் மூத்தவர்கள் பாண்டியர்கள் 'பண்டு' என்ற அடி சொல்லுக்கு 'பழமை' என்பது பொருள் இந்த பண்டு என்னும் மூலச் சொல்லின் அடியாக பிறந்ததே பாண்டியர் என்னும் சொல் பாண்டியர்கள் என்பதன் பொருள் பழைய குடியை சேர்ந்தவர்கள் எனவே பழமையான குலத்தை சேர்ந்தவர்கள் பாண்டியர்கள்.

மூவேந்தர்களின் குலம்

சேரர்களின் குலம் குறித்துச் சங்க இலக்கியத்தில் எந்தக் குறிப்பும் காணப் பெறவில்லை. பிற்காலத்தில் புலவர்கள் சேரர் களை அக்கினி குலத்தவர்கள் என்றார்கள்

"இவன் செந்தழலோன் மரமாகி ஈரேழ்
உலகும் புகழ் சேரன்"[1]

என்று வில்லிபாரதம் கூறுவதன் மூலம் சேரர்களின் குலத்தை அறிய முடிகிறது.

சோழர்களின் குலம் குறித்த செய்தியினை இரட்டைக் காப்பியங்களின் வழி அறியலாம். சோழர்களைச் சூரிய குலத்தவர்கள் என்று கூறுகின்றார்கள். என்பதை,

"செங்கதிர்ச் செல்வன் திருக்குலம்"[2]

பாண்டியர்களின் குலத்தினை பற்றிய குறிப்புகளும் இரட்டைக் காப்பியத்தில் உள்ளது. என்பதை,

"தென்திசை ஆண்ட தென்னவன் வாழி
திங்கள் செல்வன் திருகுலம்"[3]

இவ் வரிகள் மூலம் இவர்கள் சந்திர குலத்தவர்கள் என்று அறிய முடிகிறது.

மேலும் இதற்கு விளக்கம் அளிக்கும் வகையில், "கடலுள் மூழ்கி குமரி நாடாகிய பாண்டிய நாட்டில் கதிரவன் கழிபெருங் கடுமையாய்க் காய்ந்து மக்கள் திங்களையே

விரும்பும்படி செய்ததினால், பாண்டியர் தம்மைத் திங்கள் வழியினராகவும்; குண புலமாகிய சோழ நாடு கதிரவன் எழுந்திசையிலிருந்ததால், சோழர் தம்மைக் கதிரவன் வழியினராகவும்; மலை நாடாகிய சேர நாட்டில் மூங்கிலும் பிறவும் ஒன்றோ டொன்றுரசி அடிக்கடி பெரு நெருப்புப் பற்றியதால், சேரர் தம்மை நெருப்பு வழியினராகவும் கூறிக் கொண்டார்கள்"[4] என்று தேவநேயபாவாணர் கூறுகிறார்.

சங்க இலக்கியச் சான்றுகளும் பிற்காலக் குலமரபுச் செய்திகளும்

மூவேந்தர்களின் குலமரபு குறித்த செய்திகள் அனைத்து கால இலக்கியங்களிலும் ஒரே நிலையில் இடம்பெறவில்லை. சங்க இலக்கியங்களில் காணப்படும் அரசர், குடி, மரபு, சின்னம் தொடர்பான செய்திகள் ஒரு நிலையில் அமைகின்றன. பிற்காலக் காப்பியங்கள், புராணத் தன்மையுடைய இலக்கியங்கள் மற்றும் உரையாசிரியர்களின் விளக்கங்களில் மூவேந்தர்களின் குலம் குறித்த விரிவான மரபுச் செய்திகள் காணப் படுகின்றன. எனவே, சேரர்களை நெருப்புக் குலத்தவராகவும், சோழர்களைச் சூரிய குலத்தவராகவும், பாண்டியர்களைச் சந்திர குலத்தவராகவும் குறிப்பிடும் செய்திகளை அவை இடம்பெறும் இலக்கியக் காலத்துடனும் இலக்கியச் சூழலுடனும் இணைத்தே புரிந்துகொள்ள வேண்டும். இச்செய்திகள் இலக்கிய மரபுச் செய்திகளாக அணுகப்பட வேண்டுமேயன்றி, அவற்றை நேரடியாக வரலாற்று உண்மைகளாக நிறுவுவதற்கு தனித்த வரலாற்றுச் சான்றுகள் தேவைப்படும்.

மூவேந்தர்களின் அடையாள மாலைகள்

சங்ககாலத்தில் பெருவேந்தர்கள் போருக்கு செல்வதற்கும், வெற்றிவாகை சூடுவதற்கும் தனக்கென்று தனித்தனி அடையாள மாலை கள் இருந்தது என்பதை,

"போந்தை வேம்பே ஆர்என வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்"[5]

என்று தொல்காப்பியரும்,

"வேம்பும் ஆரும் போந்தையும் மூன்றும்
மலைந்த சென்னியர், அணிந்த வில்லர்"[6]

என்று புறநானூறு சுட்டுகிறது. இதன் வழி சேரர்களுக்கு பனம்பூ மாலையும், சோழர் களுக்கு ஆத்திபூ மாலையும், பாண்டியருக்கு வேப்பம்பூ மாலையும் அடையாள மாலை களாக இருந்தது என்பதை அறியலாம்.

சேரர்களின் கொடி

மூவேந்தர்களும் தங்களின் அரசியலை நிலை நாட்ட தனித்தனியே கொடிகளைக் கொண்டு தன்னை அடையாளப் படுத்தினார்கள். அந்த வகையில் சேரர்களின் அடையாளமாக வில்கொடி விளங்கியது என்பதை,

"வில்கெழு தடக்கை வெல்போர் வானவன்"[7]

என்பதன் மூலம் வில் போரில் வல்லவர்கள் சேரர்கள் அவர்களது அடையாளமாக வில் கொடி இருந்தது என்று ஆமூர் கவுதமன் சாதேவனார் கூறுகிறார்.

"சேரமன்னர்கள் மலைநாட்டில் வாழ்ந்ததால் மலைகளிலும் மலைச்சரிவுகளிலும் மண்டி யிருந்த பெருங்காடுகளில் வேட்டம் புரிவதையே தொடக்கத்தில் மேற்கொண்டு இருந்தனர் அதனால் இவர்களுடைய கொடி யில் வெளிப்படை பொறிக்கப்பட்டிருந்தது"[8] என்று கூறுகின்றார். மேலும் சேரர்கள் வேட்டையாடியதால் வேட்டுவர்கள் என்றும் சங்க இலக்கியங்கள் சேரர்களை குறிப்பிடுகின்றது.

இமயம் வரை பொறிக்கப்பட்ட விற்கொடி

சேரவம்சத்தை சேர்ந்த நெடுஞ்சேரலாதன் வட இந்தியா வரை படையெடுத்துச் சென்று இமயமலையில் வில் சின்னத்தை பொறித்த தால் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்று அழைக்கப்பட்டான். என்பதை,

"வெளியன் வேண்மாள் நல்லினி ஈன்றமகன்
அமைவரல் அருவி இமயம் வில்பொறித்து"[9]

என்ற வரிகளின் மூலம் இமயத்தில் வில் சின்னத்தைப் பொறித்து வெற்றி கொடி நாட்டினான் என்று சிறப்பிக்கப்படுகிறான். மேலும்,

இமயம் சூட்டிய ஏம விற்பொறி
மாண்வினை நெடுந்தேர் வானவன்[10]

என்ற பாடல் வரிகளின் மூலமும் இமயத்தில் விற்கொடி பறந்தது என்பதை நம்மால் அறிய முடிகிறது இதன் மூலம் சேரர்களின் கொடிசிறப்பினை அறியலாம்.

செங்குட்டுவனின் கொடி

சேரன் செங்குட்டுவன் வெற்றி பெற்றதன் அடையாளமாக அவனது மாட வீதிகளிலும் வெற்றி பொருந்திய கொடிகள் பறந்தது. என்பதை,

"வரைமிசை இழிதரும் அருவியின் மாடத்து
வளிமுனை அவிர்வரும் கொடிநுடங்கு
தெருவில்"[11]

என்ற வரிகளில் செங்குட்டுவனின் குடியானது மலையில் இருந்து விழும் அறிவியல் போன்ற உயர்ந்த மாதங்களில் காற்று வீசிக் கொடிகள் அசைகிறது சிறப்பாக காட்சியளித்தது.

தேவர்களை காக்கும் விற்கொடி

சேர மன்னனின் விற்கொடியானது மண்ணில் வாழும் மக்களை பகைவர்களிடமிருந்து காப்பது மட்டுமின்றி வானுலக தேவர் களையும் காய்கிறது விற்கொடி என்றும்,

"மல்லல் நெடுமதில் வாங்குவிற் பூட்டுமின்
வள்ளிதழ் வாடாத வானோரும் வானவன்
வில்லெழுதி வாழ்வர் விசும்பு!"[12]

என்ற பாடல் வரிகள் மூலம் மண்ணுலக மக்களும், விண்ணுலக தேவர்களும் தனது மாளிகைகளில் விற்கொடியை பறக்க விட்டனர் என்பது தெரிகிறது.

சோழர்களின் கொடி

சோழர்களது கொடியில் அவர்களின் வீரத்தை அடையாளமாக புலி சின்னம் பொறிக்கப் பட்டுள்ளது. இதனையே வெளிநாட்டு பண்டங்களிலும் நாணயங்களிலும் பொறித்தனர் என்பதை,

"புலிப்பொறிப் போர்க்கதவிற்"[13]

என்பதன் மூலம் சோழர்கள் புலிக்கொடியை சின்னமாக கொண்டு இருந்தனர் எனலாம். மேலும் சோழநாட்டில் காடுகள் அதிகம் ஆகையால் காட்டில் அதிக புலிகள் வாழ்ந்து இருக்க வேண்டும் அதனால் அதனையே சின்னமாகவும் வைத்திருக்க வேண்டும்.

நலங்கிள்ளியின் கொடி

சங்ககால மன்னர்கள் தமக்குரிய கொடியினை மதிலின் மீதும், கோட்டை மீதும், பல இடங்களிலும் ஏற்றி வைத்தனர். என்பதனை,

"கடும்பின் அடுகலம்
நிறையாகநெடுங்கொடிப்
பூவா வஞ்சியும் தருகுவன்; ஒன்றோ"[14]

என்னும் வரிகளில் மூலம் நம் சுற்றத்தாரின் உண்கலங்கள் நிறையும் வண்ணம் நீண்ட கொடி விளக்கும் வஞ்சி மாநகரையும் தருவான் என்று கோவூர்கிழார் சோழன் நலங்கிளியின் கொடிச்சிறப்பினை பாடுவதன் மூலம் தெளிவாகிறது.

கிள்ளி வளவனின் கொடி

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் கொடியின் சிறப்பினைப் பற்றி சங்க பாடல்களில் விலக்கியுள்ளனர் என்பதை,

"வரைபுரையும் மழகளிற்றின்மிசை
வான்துடைக்கும் வகையபோல
விரவுஉருவின கொடிதுடங்கும்
வியன்தானை விறல்வேந்தே!"[15]

அதாவது மலை போன்ற இளமையான யானையின் மேல் வானத்தை துடைப்பவை போல் பல உருவங்களை உடைய கொடிகள் அசையும் பரந்த படையுடைய வேந்தனே என்று அவனது கொடி சிறப்பினையும் படைச்சிறப்பினையும் ஒரு சேர பாடியுள்ளார் புலவர்.

தேரில் அசையும் கொடி சிறப்பு

சங்க காலத்து வேந்தர்கள் தங்களது படையைச் செலுத்தி போர் புரியும் போது பல காரணங்களுக்காக வெளியே செல்லும் போது குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் கொடிகளை உடையவர்களாக காட்சியளித் தனர். என்பதை,

"வளிநடந் தன்ன வாச்செலல் இவுளியொடு
கொடிநுடங்கு மிசைய தேரினர் எனாஅக்"[16]

என்னும் பாடல் வரிகள் மூலம் அறியலாம் காற்று விரைவாகச் செல்வது போல தாவி செல்லும் குதிரைகளோடு கொடியசையும் தேரினர் என்று சங்க புலவர்கள் போற்றும் அளவுக்கு தேரில் கொடைகளை பறக்க விட்டனர். இச்சங்க பாடல்கள் வழி சோழர்களின் கொடிச்சிறப்பினை அறியலாம்.

பாண்டியர்களின் கொடி

பாண்டியர்களின் அடையாளச் சின்னமாக மீன் சின்னத்தைத் தமது கொடியில் பதித்தனர். பாண்டியர்களின் தலைநகரமாக இருந்த கொற்கை உலகப் புகழ்பெற்ற முத்து மற்றும் கடல் வணிகத் தளமாக விளங்கியது. பாண்டியர்கள் தங்களை வாழ வைக்கும் கடலையும் கடலின் வளத்தையும் போற்றும் வகையில் மீன் சின்னத்தை அடையாளம் ஆக்கினர் என்பதனை சங்க இலக்கியமும் சங்க இலக்கியம் கடந்து பக்தி இலக்கியமும் பறைசாற்றுகின்றது. என்பதனை,

"பருப்பத்துக் கயல் பொறித்த
பாண்டியர்குலபதி"[17]

என்னும் வரி பாண்டியர்களின் சின்னத்தைத் தெளிவுபடுத்துகிறது.

பாண்டிய நெடுஞ்செழியனின் கொடி

தலையாலங்கானது செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியனின் கொடிசிறப்பினை

"பொன்அணி யானைத் தொல்முதிர் வேளிர்
குப்பை நெல்லின் முத்தூறு தந்த
கொற்ற நீள்குடை, கொடித்தேர்ச் செழிய!"[18]

என்பதன் மூலம் பொன்னணி பூண்ட யானை களை உடைய பழமையான வேளிரின் முத்தூற்றுக் கூட்டத்தை கொண்ட வெற்றிப் பொருந்திய குடையினையும், கொடியினால் பொலிந்த தேரினையும் உடைய செழியனே என்று பாடுவதன் மூலம் நெடுஞ்செழியனின் குடைச்சிறப்பினையும் கொடிச்சிறப்பினையும் எடுத்துக்காட்டுகிறது.

வெற்றி கொடிகளால் தேரினை அலங்கரித்தல்

பாண்டியர்கள் போர்க்களத்துக்கு செல்லும் போதும், நகர்வலம் செல்லும் போதும் பாண்டியர்கள் தங்களது அரசகொடியின் அடையாளத்துடன் சென்றுள்ளனர் என்பதை அவர்கள் சென்ற தேர்கள் மூலம் அறியலாம்.

"கொய்சுவல் புரவிக் கொடித்தேர்ச் செழியன்"[19]

என்ற வரிகளின் மூலம் பாண்டியர்களின் கொடிகளாலே அலங்கரிக்கப்பட்ட தேரினை உடையவன் நெடுஞ்செழியன் என்று புலவர் பாடுவதன் மூலம் பாண்டியர்களின் வெற்றிக் கொடி சிறப்பினை அறியமுடிகிறது. மேலும் இதனையே,

"கொடிபாடித் தேர்பாடிக் கொய்தண்தார்"[20]

என்ற வரிகளின் மூலம் பாண்டியர்களின் கொடிகளிலையே தேர்களை அலங்கரித்து அத்தேரினைப் போர்க்களத்திற்கும், மன்னர் தேரில் நகர்வலம் வரும்பொழுது தனது அரச கொடியின் அடையாளத்துடனும் வெற்றிக்கொடியின் அடையாளமாகவும் வீரத்தின் அடையாளமாகவும் கொடிகளை மன்னர்கள் மதித்தார்கள் என்று தெரிகிறது. இவைகளின் மூலம் பாண்டியர்களின் கயல் பொறித்த கொடிகளின் சிறப்புகளை அறிய முடிகிறது.

இமயத்தில் மூவேந்தர்களின் கொடிகள்

முப்பெரு வேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவருமே இமயமலையில் தமது கொடியினை நட்டு தங்களது வெற்றியை உலகிற்கு காட்டியுள்ளனர் என்பதனை சங்க இலக்கியங்கள் மற்றும் சிலப்பதிகாரம் முழுவதும் குறிப்புகள் உள்ளது. என்பதனை,

"கயலெழுதிய இமயநெற்றியின்
அயலெழுதிய புலியும் வில்லும்"[21]

இப்பாடல் வரிகளில் பாண்டியர்களின் மீன் கொடியும், சோழர்களுக்கான புலி கொடியும், சேரர்களுக்கான வில் கொடியும் இமயத்தை வென்று இமயமலையில் வெற்றி கொடியாக பறந்தது என்பதை கூறுகிறது. மேலும்,

"----------தென்தமிழ்நாடு
ஆளும் வேந்தர் செருவேட்டுப்புகனறெழுந்து
மின்தவழும் இமயநெற்றியில் விளங்கு வில்
புலிகயல் பொறித்த நாள்"[22]

என்னும் வரிகளின் மூலம் பகை மன்னர் களாகிய வடநாட்டு மன்னர்களும் மூவேந்தர் களின் வெற்றியினை பறைச்சாற்றும் வகை யில் இமயத்தை வென்றவர்கள் என்றும் இமயத்தில் பறந்த வெற்றி கொடிகளைப் பற்றியும் கூறியுள்ளது மேலும் சிறப்பு குறிய செய்திகளாகும். என்பதை

"பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து
மண்ணாண்டான்"[23]

இவ்வரிகளின் மூலம் பொன் போன்ற இமயமலையைச் சோழன் வென்று அந்த வெற்றியின் அடையாளமாக தனது புலி சின்னத்தைப் பொறித்தான் என்று சோழனை தனித்துவமாக இப்பாடல் வாழ்த்துகின்றது. மேலும் இதுபோன்று சேரனையும் தனித்துவ மாக காட்டும் வகையில்,

"வில் எழுதிய இமயத்தொடு
கொல்லி யாண்டு குடவர் கோவே"[24]

இவ்வரிகளில் இமயத்தை வென்று வெற்றி கொடியாக தனது வில் கொடியினை இமயத்தில் பொறித்த கொல்லிமலை ஆண்ட கோவே என்று சேரனைத் தனித்துவமாக வாழ்த்தி பாடியதன் வழி அறியலாம். இம் முப்பெரு வேந்தர்களின் வெற்றிகொடிகளா னது இமயம் வரை பறந்த காட்சியானது பண்டைய கால தமிழர்களின் எல்லை கடந்த வீரத்தை கூறுகிறது.

இமய வெற்றி – இலக்கியப் படிமமும் வரலாற்றுப் பார்வையும்

மூவேந்தர்களும் இமயமலை வரை சென்று தமது அரசச் சின்னங்களைப் பொறித்ததாகச் சங்க மற்றும் பிற்காலத் தமிழ் இலக்கியங் களில் செய்திகள் காணப்படுகின்றன. இச் செய்திகள் தமிழரசர்களின் வீரப் பெருமை, அரசியல் விரிவு, வெற்றியுணர்வு ஆகியவற்றை வெளிப்படுத்தும் இலக்கியப் படிமங்களாகவும் கருதப்படுகின்றன. எனவே, இமயத்தில் புலி, வில், கயல் ஆகிய சின்னங்கள் பொறிக்கப் பட்டதாகக் கூறப்படும் செய்திகளை இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில்

பதிவு செய்வதோடு, அவற்றை வரலாற்று நிகழ்வுகளாக உறுதிப்படுத்துவதற்கு கல்வெட்டு, தொல்லியல் மற்றும் பிற சமகாலச் சான்றுகளின் ஒப்பாய்வு தேவை என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

முடிவுரை

செவ்வியல் இலக்கியங்கள் காட்டும் மூவேந்தர்களின் குலமரபும் கொடிச் சிறப்பும் வெறும் அரசவம்சங்களின் பெருமையைப் பேசுவது மட்டுமல்ல அவை பழந்தமிழர் சமூகத்தின் அரசியலையும் தமிழர்களின் வாழ்வியலையும் பறைச்சாற்றும் வரலாற்றுச் சான்றுகளாகும். இவர்களின் குலங்களாகிய நெருப்பு, சூரியன், சந்திரனாகியவை வானிய லோடும், இயற்கையோடும் தொடர்புடையது. மேலும் இவர்களின் கொடிகள் வில், புலி, கயல் போன்ற பொறிக்கப்பட்ட சின்னங்கள் இயற்கையோடு தொடர்புடையது. இக்கொடி கள் இமயம் வரை பறக்கவிடப்பட்ட நிகழ்வு கள் தமிழர்களின் எல்லை கடந்த வீரத்தையும் ஆதிக்கத்தை யும் உலகிற்கு கூறுகிறது. முடியாட்சி மறைந்து போயினும் செவ்வியல் இலக்கியங்கள் வழி இன்றும் நிலை பெற்றுள்ள மூவேந்தர்களின் குலப்பெருமை யையும் கொடிச்சின்னங்களும் இன்றும் தமிழர்களின் தொன்மையும் வீரத்தையும் உலகிற்கு பறைச்சாற்றும் வண்ணமாக இலக்கியங்களில் வாழ்ந்து வருகின்றன.

அடிக்குறிப்புகள்

1. வில்லிபாரதம்-திரௌபதி மாலையிட்ட சருக்கம்.45.4
2. மேகலை, பதிகம். வ-9
3. சிலம்பு11, வ22-23
4. ஞா.தேவநேயப் பாவாணர், பழந்தமிழ் ஆட்சி
5. தொல், பொருள் நூ-53
6. புறம், பா-338
7. அகம், பா-159
8. ஔவை.சு.துரைசாமி, சேர மன்னர் வரலாறு ப-24
9. பதிற்..(இ.ப) பதிகம், வ-3-4
10. புறம், பா-39
11. பதிற், பா-47
12. முத்தொள்ளாயிரம், பா-5
13. பட்டினப்பாலை, வ-40
14. புறம், பா-32
15. மேலது, பா-38
16. மேலது, பா-38
17. நாலாயிர திவ்ய பிரபந்தம், பா-469
18. புறம், பா-24
19. அகம், பா-36
20. முத்தொள்ளாயிரம், பா-36
21. சிலம்பு 17,வ-1-2
22. மேலது 29, வ-10-13
23. மேலது 17
24. மேலது 24

துணை நூற்பட்டியல்

1. ச.திருஞானசம்பந்தம் - தொல்காப்பியம் பொருள் அதிகாரம் மூலமும் உரையும், கதிர் பதிப்பகம் திருவையாறு.
2. ச.வே. சுப்பிரமணியன் - சங்க இலக்கியம் எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும், மணிவாசகர் பதிப்பகம் சென்னை.
3. ச.வே. சுப்பிரமணியன் - சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரையும், மணிவாசகர் பதிப்பகம் சென்னை.
4. ந.மு. வேங்கடசாமி நாட்டார் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை - ஐம்பெருங்காப்பியங்கள், இளங்கணி பதிப்பகம் சென்னை.
5. க. நர்மதா – முத்தொள்ளாயிரம், கலைஞர் பதிப்பகம் சென்னை.
6. ஔவை சு. துரைசாமி - சேர மன்னர் வரலாறு, குமரன் பதிப்பகம் சென்னை.
7. ஞா. தேவநேயப் பாவாணர் – பழந்தமிழாட்சி, பூம்புகார் பதிப்பகம் சென்னை.